சார்பு நீதிமன்றம். விருதுநகர்

H.M.O.P.No: 156/2023 Date: 13.02.2026

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி–2(R.W.2)ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.N.வீரராஜ், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ்குமார் | சாதி | : | -- |
| த/பெ | : | தனசேகரன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | செந்திவிநாயகபுரம் தெரு | தொழில் | : | |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 37 |

முதல் விசாரணை

1) நான் விருதுநகரில் வசித்து வருகிறேன். நான் மரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டேன். நானும், எதிர்மனுதாரர் விக்னேஷ்வரனும் கடந்த 22 வருடங்களாக பழக்கப்பட்டவர்கள். மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதலித்து திருமணம் செய்து கொண்ட விபரம் எனக்கு நன்றாக தெரியும். மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் 29.06.2014ம் தேதி திருச்செந்தூரில் வைத்து திருமணம் நடந்தது. அந்த திருமணத்தில் நான் கலந்து கொண்டேன். திருமணத்திற்கு பின்னர் இருவரும் விருதுநகர், சேக்கிழார் தெருவில் வசித்து வந்தனர். அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர்.

2) மனுதாருக்கும், எதிர்மனுதாரரின் தாயாருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அது சம்மந்தமாக நான் பேச சென்ற போது அது குறித்து என்னை பேச மனுதாரர் அனுமதிக்கவில்லை. மனுதாரும்,

எதிர்மனுதாரரும் கடந்த 5 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். நானும், எதிர்மனுதாரரும் மனுதாரிடம் தாயாரிடம் சேர்ந்து வாழ வைக்க கோரி பலமுறை பேசினோம். அதற்கு அவர்கள் ஒத்து வரவில்லை. எதிர்மனுதாரர் தனது முதல் குழந்தையான கீர்த்தன் என்பவரை கடந்த 5 வருடங்களாக தன்னுடன் வைத்து வளர்த்து வருகிறார். மனுதாருடன் எதிர்மனுதாரர் தற்போது வரை சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக என்னிடம் கூறினார்.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)